1992 மார்ச் 31]

நேரத்தில் அவர்கள் ரயில்தான் செல்லவேண்டுமென்று ஒரு ஆணையை இந்த அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த அதிகாரிகள் எந்தெந்த முறைகளில் பயணம் செய்ய வேண்டுமென்று விதிமுறைகள் சரியாக வகுக்கப்பட்டிருக்கின்றன. நான் முதலிலே குறிப்பிட்டபடி, குறிப்பிட்ட இந்த அதிகாரிகள்தான் விமானத்தில் செல்லலாமே தவிர, மற்றவர்கள் எல்லாம் விமானத்தில் செல்ல அனுமதியில்லை. அவர்கள் எல்லாம் ரயிலில்தான் பயணம் செய்யவேண்டும். உதாரணமாக அமைச்சர்கள் போக வேண்டுமென்றால் அமைச்சர்கள் மட்டும் தான் விமானத்தில் போவதற்கு உரியவர்களே தவிர, அவர்களுடைய பி.ஏ.க்கள் கூட, வருகிற அதிகாரிகள் ரயிலில்தான் போகவேண்டும். ரயிலில்தான் திரும்பவேண்டும் என்ற முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. எக்சிகியூடிவ் கிளாஸ் என்று வெளி நாடுகளுக்குச் செல்லக்கூடிய அளவுக்கு அதிகாரிகளும் மற்றவர்களும் அமைச்சர்களும் பயன்படுத்தி வந்தார்கள். அண்மையில்தான் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்கள் வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்கிறபோது, செலவு ஏராளமாக ஆகின்ற காரணத்தால், தால், எக்சிகியூடிவ் கிளாசில் போகக்கூடாது, எக்கானமி வகுப்பில்தான் போகவேண்டுமென்று மத்திய அரசைப் பொறுத்தவரையில் வெளிநாட்டுப் பயணத்திற்கு அந்த உத்தரவு இப்போது இருக்கிறது. உள்நாட்டுப் பயணத்திற்கு அந்த நிலை வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 397, டாக்டர் தே. குமாரதாஸ், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

397—

அரசுப்பணியில் அல்லாத வழக்கறிஞர்கள் இறந்தால் நிதி உதவி அளித்தல்.

* 3541—டாக்டர் தே. குமாரதாஸ் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசுப் பணியில் அல்லாத வழக்கறிஞர்கள் திடீரென இறந்தால், அவர்களது குடும்பங்களுக்கு நிதியுதவி அளிக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம். அரசு சில.. தீர்க்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தீர்க்கமான சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்னென்ன வீதங்களில் எல்லாம் உதவி செய்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவிதமான உதவிகள் அரசு சார்பில் வழங்கப்பட்டு வருகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பொறுப்பில் இல்லாத வழக்கறிஞர்கள் திடீரென்று மரித்துவிட்டால் அவர்களுடைய குடும்பங்களுக்கு இரண்டு வகைகளில் இரண்டு முனைகளில் இன்றைக்கு நிதியுதவி அரசு செய்து வருகிறது. ஒன்று, போற்றுதலுக்குரிய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கிறபோது, 1987-வது ஆண்டு தமிழ்நாடு அட்வகேட்ஸ் வெல்பேர் பண்ட் ஆக்ட் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டத்தின்படி ஒருவர் இறந்துவிட்டால், இடையில் மரித்துவிட்டால், வழக்கறிஞர்கள் சங்கத்தில் உறுப்பினராக நான்காண்டுகள் இருந்த ஒருவர் இறந்துவிட்டால் அவர்களுக்கு ரூ. 30,000 கொடுக்க அதில் முடிவெடுக்கப்பட்டது. அந்தத் திட்டம் 1991-வது ஆண்டு முதற்கொண்டு செயல்பட்டு வருகிறது. ஆனால் அதிலே சில திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று தமிழ்நாடு பார் கவுன்சில் கேட்டுக் கொண்டதற்கிணங்க இன்றைக்கு ஒவ்வொரு வழக்கறிஞரும், வக்காலத்தில் ஒரு ரூபாய் கட்டி நிதி செலுத்த வேண்டுமென்பதற்குப் பதிலாக இரண்டு ரூபாயாக அதை ஆக்கி, அந்த ரூ. 30,000-க்கு பதிலாக ரூ. 60,000 கொடுக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இன்றைக்கு அப்படியொரு சட்டம் கேரளாவில் இருப்பதால் அதை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்த அடிப்படையில் இந்தக் கூட்டத் தொடரிலேயே ரூ. 60,000-ஐ அவர்களுக்குக் கொடுக்கின்ற திட்டத்தினை போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அவர்கள் கொண்டுவர ஆணையிட்டிருக்கிறார்கள்.

1992 மார்ச் 31]

முற்பகல் 9.40

அடுத்து 'டில்லி'யிலே இருக்கின்ற பார் கவுன்சில். அது 1984-வது ஆண்டிலேயிருந்து ஒரு திட்டத்தை அமல் செய்து வருகிறது. அதாவது ஆண்டு ஒன்றுக்கு ஒரு வழக்கறிஞர் பத்து ரூபாய் செலுத்திவிட்டால் அந்த வழக்கறிஞர் மரித்துவிட்டால் அந்தக் குடும்பத்திற்கு ஐந்தாயிரம் ரூபாயை டில்லியிலே இருக்கிற பார் கவுன்சில் கொடுக்கும். தமிழ்நாடு பார் கவுன்சில் மூலமாகக் கொடுக்கும். அதன் மூலம் தமிழ்நாட்டிலேயே இருக்கின்ற 178 வழக்கறிஞர்களுடைய குடும்பங்கள் இதுவரையில் அந்தத் திட்டத்தினாலே பயன்பெற்றிருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டினுடைய திட்டம் அண்மையிலேதான் ஆரம்பிக்கப்பட்ட காரணத்தால் அது இது வரையில் வழங்கப் படவில்லை. ஆனால் அதற்கென நிதி சேர்ந்திருக்கிறது. 14 இலட்சம் ரூபாய் இன்றைக்கு நிதியாக அவர்களுக்குக் கொடுக்கின்ற வகையிலே சேர்ந்திருக்கிறது. தமிழ்நாட்டிலே 20,500 வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். ஆனால் இதில் உறுப்பினர்களாக ஆனவர்கள் 4,500 தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களிடத்திலே எல்லாம் சொன்னேன் தயவுசெய்து வழக்கறிஞர்களுக்காக வாதாடுகிறீர்களே, அவர்கள் ஆண்டு ஒன்றுக்கு 50 ரூபாய்தான் கட்டவேண்டும், பத்து வருடங்களுக்கு அதிகமாக இருப்பவர்கள் 100 ரூபாய் கட்ட வேண்டும். அபபடி கட்டினால்தான் அதனுடைய பயன்வரும் என்று சொன்னேன். இதுவரையில் 4,500 வழக்கறிஞர்கள்தான் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இங்கே 20,500 பேர் இன்றைக்கு வழக்கறிஞர்களாக இருக்கிறார்கள். மிகுதியாக இருக்கிற வழக்கறிஞர்களும் உறுப்பினர்களானால், விரைவிலே சட்டம் வர இருக்கிறது. முப்பதாயிரம் ரூபாயிலிருந்து அறுபதாயிரம் ரூபாயாக ஆக்க போற்றுதலுக்குரிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கிறார்கள். இந்த சட்டமன்றத்திலே 234 உறுப்பினர்களில் ஏறத்தாழ 60-க்கு மேற்பட்டவர்கள் வழக்கறிஞர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இந்தப் பணியினை செய்ய வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள் கிறேன்.

<u>டாக்டர் தே. குமாரதாஸ்</u> ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி. ஆக சட்டம் போடுகிற அதே நேரத்தில் இந்த இளநிலை வழக்கறிஞர்கள் எல்லாம் இதிலே அங்கத்தினர்களாக சேரவேண்டும் என்ற நிர்ப் பந்தத்தையும் சேர்த்து வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1992 மார்ச் 22

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு 50 ரூபாய்தான் கொடுக்கிற திட்டம். ஐம்பது ரூபாய் கொடுத்தால் அறுபதாயிரம் ரூபாய் வருகிறபோது இதனைக் கட்டாயப்படுத்துவது என்பது, அதுவும் படித்த, கண்ணியம் மிக்க வழக்கறிஞர்களை கட்டாயப்படுத்துவது என்பது உகந்ததல்ல என்பதை நானும் வழக்கறிஞர் என்ற காரணத்தாலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. கு. சீனிவாசன்.

திரு. கு. சீனிவாசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்கள் பணியாற்றுகின்ற காலத்தில் திடீரென்று இறந்துவிட்டால் இந்த நிதி அளிக்கப்படும் என்று கூறினார்கள். செயற்கையாக மரணம் அடைந்தால் இந்த உதவி வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இயற்கையாகத் தானே ; இறப்பதிலே என்ன இயற்கையாக, செயற்கையாக? (சிரிப்பு).

திரு. கு. சீனிவாசன் ; அக்சிடெண்ட்டில் திடீரென்று இறப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திடீரென்றுதான். இறப்பு இறப்புத்தான்.

வினா எண் 398—திரு. கே. பி. மணிவாசகம். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

398—

உடுமலைப்பேட்டை சிறைச்சாலையை விரிவு படுத்துதல்.

* 4772—திரு. கே. பி. மணிவாசகம் ;

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) உடுமலைப்பேட்டை கிளை சிறைச்சாலையை விரிவு படுத்தும் கருத்துரு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?